**மே - 12**

# TNPSC துளிகள்

- முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், நிதிக்குழு உறுப்பினர் C.H. ஹனுமந்த ராவினால் எழுதப்பட்ட "மார்க்ஸிஸம்-லெனினிஸம் முதல் நேருயிஸம்-சோசியலிஸம் வரையிலான என்னுடைய பயணம்" என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- உலகின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனமான சவுதி ஆராம்கோ தன்னுடைய நிறுவத்தில் முதல் பெண் வாரிய உறுப்பினரை நியமித்துள்ளது.
    - சுனோகோ எனும் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத்தின் முன்னாள் தலைமைச் செயல் அதிகாரியும், பழம்பெரும் தொழில்துறை வல்லுநருமான லின் லாவெர்டி எல்சென்ஹேன்ஸ், சவுதி அராம்கோ வாரியத்தின் உறுப்பினராக இணைந்துள்ளார்.
- 2017ஆம் ஆண்டுக்கான பெருமைமிகு குடிமைப்பணித் தேர்வுகளில் இரண்டாம் இடம் பிடித்த திருமதி. அனுகுமாரி, "பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ" (Beti Bachao Beti Padhao) பிரச்சாரத்திற்கான தூதராக அரியானா மாநிலத்தின் சோனிபட் மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## விஸ்தாரா

- டாடா சன்ஸ் மற்றும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் கூட்டு முயற்சியான விஸ்தார விமான நிறுவனம், 280 விமான நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகத்தின் உறுப்பினராகியுள்ளது.

A TATA SIA JV
vistara
Fly the new feeling

- விஸ்தாரா, பாதுகாப்பிற்கான தன்னுடைய பொறுப்புகளை அளித்து சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகத்தின் செயல்பாட்டு பாதுகாப்பு தணிக்கையை (IATA Operational Safety Audit - IOSA) வெற்றிகரமாக முடித்துள்ளது.
- இந்தியாவிலிருந்து ஏர் இந்தியா மற்றும் ஜெட் ஏர்வேஸ் ஆகிய இரண்டு விமான நிறுவனங்கள் மட்டுமே சர்வதேச விமானப் போக்குவரத்துக் கழகத்தின் உறுப்பினர்கள் ஆவர்.

## பிளாஸ்டிக் இல்லா பகுதி

- உலக சுற்றுச்சூழல் தினத்தை (ஜூன் 5) முன்னிட்டு, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் நாட்டிலுள்ள அனைத்து பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலும் பிளாஸ்டிக் பயன்பாட்டிற்குத் தடைவிதித்ததோடு அப்பகுதிகளை பிளாஸ்டிக் இல்லா பகுதிகளாகவும்

அறிவித்துள்ளது.

- இந்த ஆண்டு உலக சுற்றுச்சூழல் தினத்தை இந்தியா நடத்தவுள்ளது உள்ளது.
- இந்தியாவிலுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதிகள் அளவானது, மொத்த நிலப்பகுதிகளில் 5% மட்டுமே என்பதற்கான அடையாளத் தொடக்கமே (Symbolic initiative) இந்த அறிவிப்பு ஆகும்.
- பிளாஸ்டிக் நுகர்வானது அவற்றின் மூல ஆதாரநிலையில் குறைக்கப்பட வேண்டும். பிளாஸ்டிக் கழிவுகளை நன்கு குறைப்பதற்கு பிளாஸ்டிக் உற்பத்தி கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

## நாது லா வழியாக எல்லை வர்த்தகம்

- இந்தியா மற்றும் சீனாவைச் சார்ந்த இருதரப்பு வணிகர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பரிசுப்பொருட்கள் மற்றும் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன் நாதுலா எல்லை வழியாக 2018 ஆம் ஆண்டிற்கான இந்தியா-சீனா இடையேயான இருதரப்பு வர்த்தகம் தொடங்கியது.
- கடந்த ஆண்டு இந்த வர்த்தகம் டோக்லாம் பிரச்சினையைத் தொடர்ந்து தடைபட்டது.
- 14,200 அடி உயரத்தில் அமைந்துள்ள நாதுலா எல்லைப்பகுதி வழியிலான இருதரப்பு வர்த்தகமானது, 44 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுத்தப்பட்ட பிறகு 2006 ஆம் ஆண்டு மீண்டும் தொடங்கப்பட்டது.

## கிசன் கல்யாண் கார்யசாலா

- வட்டார அளவிலான கிசன் கல்யாண் கார்யசாலாவினை மே 2 அன்று மத்திய அரசு நடத்தியது. இதில் ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் விவசாயிகள் பங்கேற்று வேளாண் அதிகாரிகள், அறிஞர்கள், முற்போக்கு விவசாயிகள் ஆகியோருடன் கலந்துரையாடி புதிய தொழில்நுட்பங்களை ஏற்பதன் மூலமாக தங்களுடைய வருமானத்தை அதிகரிக்கும் வழிமுறைகளை விவாதித்தனர்.
- இந்த அறிவிப்பு புது தில்லியிலுள்ள விக்யான் பவனில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டிற்கான தேசிய அளவிலான கரீப் மாநாட்டில் வெளியிடப்பட்டது.

## உன்னத் பாரத் அபியான்

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், ஏப்ரல் 25, 2018 அன்று புதுதில்லியில் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் இரண்டாவது பதிப்பை தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், நாடு முழுவதுமிருந்து 750 உயர்கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள், கிராமங்களைத் தத்தெடுப்பர். அதோடு மட்டுமல்லாமல் அக்கிராமங்களுக்குச் சென்று மக்களின் வாழ்க்கை முறைகள் மற்றும் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை அறிந்து கொள்வர்.
- ஒவ்வொரு கிராமத்திலும் நான்கு துறைகளில் 25 வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பள்ளித் தேர்வுகளில் 100% தேர்ச்சி அடைதல், ஊரகப் பகுதிகளில் வருமானத்தை அதிகரித்தல், கிராமங்களுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல், கிராமப்பகுதிகளிலுள்ள குப்பைகளை அகற்றுதல் ஆகியவற்றில் கிராமங்களுக்கு

உதவிபுரிவது இத்திட்டத்தின் முக்கியக் கூறுகளில் உள்ளடங்கும்.

## இந்தியாவின் முதல் மெய்நிகர் நுரையீரல் ஊடுசோதிப்பு வழிகாட்டு அமைப்பு

- அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகம் இந்தியாவின் முதல் மெய்நிகர் நுரையீரல் ஊடு சோதிப்பு வழிகாட்டு அமைப்பை (Virtual Bronchoscopy Navigation – VBN) துவங்கியுள்ளது. இந்த வசதியினை நுரையீரலில் சிறிய புற்றுநோய் கட்டி போன்ற பகுதிகளைக் கொண்ட நோயாளிகளுக்கு நோய் பரிசோதனை மற்றும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ சிகிச்சை வசதிகளை வழங்குவதற்காக அமைத்துள்ளது.
- மெய்நிகர் நுரையீரல் ஊடுசோதிப்பு வழிகாட்டு அமைப்பானது, எய்ம்ஸில் (All India Institute of Medical Sciences - AIIMS) நுரையீரல் மருத்துவம் மற்றும் தூக்கம் சம்பந்தமான கோளாறுகள் துறையில் நிறுவப்பட்டுள்ளது.
- அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிற்குப் பிறகு இந்த வசதியை சீனா, சிங்கப்பூர் போன்ற ஒரு சில நாடுகளே கொண்டுள்ளன.
- இந்த VBN அமைப்பானது புரோங்கோ ஸ்கோப்பைப் பயன்படுத்தி அதி துல்லியமான மற்றும் பாதுகாப்பான சிறிய நுரையீரல் புண்களின் மாதிரிகளை நோயாளிகளிடம் இருந்து பெறுவதற்கு உதவுகிறது. மேலும் இந்நடைமுறை நோய்களை சோதனை செய்வதற்கான தெளிவான தன்மையை அதிகரிக்கிறது.

## ஹேமாவதி நந்தன் பகுகுனாவின் அஞ்சல்தலை

- முன்னாள் உத்திரப்பிரதேச முதல்வரான மறைந்த திரு. ஹேமாவதி நந்தன் பகுகுணாவின் நினைவு அஞ்சல்தலையை பிரதமர் வெளியிட்டார்.




- இவர், மகாத்மா காந்தி, ஆச்சார்யா வினோபாபாவே, ஆச்சார்ய நரேந்திர தேவ், இராம் மனோகர் லோகியா மற்றும் சந்திர சேகர ஆஸாத் போன்ற தலைவர்களால் ஈர்க்கப்பட்டார்.

# மாநிலச் செய்திகள்

## லகாடோங் மஞ்சள்

- வரும் ஆண்டுகளில், ஆண்டுக்கு 50,000 மெட்ரிக் டன் லகாடோங் மஞ்சளை உற்பத்தி செய்வதற்காக மேகாலயா மாநிலம் லகாடோங் திட்டத்தை (Mission Lakadong)

தொடங்கியுள்ளது.

- இத்திட்டம் தோட்டக்கலைத்துறை இயக்குநரகம், வேளாண்துறை, சமூக மற்றும் ஊரக மேம்பாட்டுத்துறை, வனத்துறை, வடகிழக்கு மலைப்பகுதி பல்கலைக்கழகம், தொழில்முனைவிற்கான மேகாலயா நிறுவனம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் அறிக்கையின்படி லகாடோங் மஞ்சள் 6 - 7.5 % அளவிலான குர்குமினை (curcumin) கொண்டுள்ளது.

## ஆந்திரப்பிரதேச இணைய பாதுகாப்பு மாநாடு

- ஆந்திரப்பிரதேச அரசு மற்றும் மாஸ்டர் கார்டு நிறுவனம் ஆகியவை பின்டெக் வேலியுடன் இணைந்து ஆந்திரப்பிரதேச இணைய பாதுகாப்பு மாநாட்டை விசாகப்பட்டினத்தில் நடத்தின.
- இந்த மாநாடானது, இணைய பாதுகாப்பிற்கான சிறந்த செயல்பாடுகளை செயலாக்கம் செய்வதற்கான ஆந்திரப்பிரதேச அரசு மற்றும் மாஸ்டர் கார்டு நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்.

## தொழிலக சூரியஒளி சிறு மின் விநியோக அமைப்பு - குஜராத்

- சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சுவிஸ் பன்னாட்டு நிறுவனமான ABB குஜராத்திலுள்ள வதோதராவிலுள்ள தன்னுடைய உற்பத்தித் கூடத்தில் முதல் இந்திய தொழிலக சூரியஒளி சிறு மின் விநியோக அமைப்பினை துவங்கியுள்ளது.
- ஒருங்கிணைக்கப்பட்ட மின்கலன் ஆற்றல் சேமிப்பு அமைப்புடன் கூடிய சிறு மின் விநியோக அமைப்பானது, திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத மின்சார நிறுத்தங்களை (Power outages) தவிர்ப்பதற்கு உதவி புரியும்.
- சிறு மின்விநியோக அமைப்பின் மேல் பகுதியிலுள்ள ஒளிமின்னழுத்த களம் (Photo voltaic field) மற்றும் இவ்வமைப்பின் மின்கலன் - ஆற்றல் சேமிப்பு அமைப்பு ஆகியவை தொழிற்சாலையின் உற்பத்திக்கு உதவிபுரிவதோடு பசுமை ஆற்றலை வழங்குவதற்கும் இயலச் செய்கிறது.

## பிரவாஸி ஓய்வூதியத் திட்டம் - கேரளா

- கேரள முதல்வர், பினராயி விஜயன் பிரவாஸி ஓய்வூதியத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- இத்திட்டத்தின் கீழ் கேரளாவைச் சேர்ந்த அனால் வேறு மாநிலம் / நாட்டில் வசிக்கும் நபர்களுக்கு மாதத்திற்கு ரூ.2000 ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.
- 60 வயதிற்கு மேற்பட்ட நபர்கள் இத்திட்டத்தின் மூலம் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர்.
- மாநில / மத்திய அரசு ஊழியர்களுக்கு இத்திட்டம் பொருந்தாது.

## ஹெலி ஆம்புலன்ஸ் - இமாச்சலப் பிரதேசம்

- இமாச்சலப் பிரதேசத்தின் அமைச்சரவை, இலவச ஹெலி ஆம்புலன்ஸ் சேவைகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. இச்சேவையானது, மனாலியிலுள்ள லேடி வில்லிங்டன் மருத்துவமனையின் உதவியோடு சுவிட்சர்லாந்து மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.
- இந்த முடிவு குறிப்பாக மாநிலத்தின் தொலைதூரப்பகுதிகள் மற்றும் பழங்குடியினப்பகுதிகளிலுள்ள நோயாளிகளுக்கு சரியான நேரத்தில் மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும், சுகாதார போக்குவரத்து சேவைகளை பலப்படுத்துவதற்குமான ஒரு நடவடிக்கையாகும்.
- சுகாதார மாற்றத்திற்கான திட்டம் - டாடா டிஜிட்டல் நரம்பியல் மைய தளத்தை (Digital Nerves Centre Platform - DiNC) குளு மாவட்டத்தில் அமைப்பதற்கும் முன்மொழிவு வழங்கப்பட்டுள்ளது.
- சேவை நோக்கில் உருவாக்கப்பட்ட டாடா டிஜிட்டல் நரம்பியல் மைய தளம், நோயாளிகள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்கள் ஆகியோர்களுக்கு புவியியல் தடைகளற்ற தொடர்பிற்கு வழிவகை செய்கிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## நரிந்தர் சவுகான்

- செர்பிய குடியரசிற்கான இந்தியாவின் தூதராக பணியாற்றி வரும் நரிந்தர் சவுகான், பிலிப்பைன்ஸ் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.




- தற்போது ஐஸ்லாந்திற்கான இந்தியாவின் தூதரான இராஜிவ் குமார் நாக்பால் வெனிசுலாவின் பொலிவர் குடியரசிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது, செக்குடியரசிற்கான இந்தியாவின் தூதரான கிருஷ்ணன் குமார், நார்வே நாட்டிற்கான இந்தியாவின் அடுத்த தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## பணியில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றிற்கான உலக தினம் - ஏப்ரல் 28

- பணியில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் ஆகிவற்றிற்கான உலக தினம் என்பது பணியில் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் கண்ணியத்தை ஊக்குவிப்பதற்கான வருடாந்திர சர்வதேச பிரச்சாரம் ஆகும்.
- பணியில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றிற்கான உலக தினம் மற்றும் குழந்தைத் தொழிலாளர் நிலைக்கு எதிரான உலக தினம் ஆகியவை இளம் பணியாளர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் ஆகியவற்றை மேம்படுத்துதல், குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழித்தல் ஆகியவற்றிற்கான கூட்டுப்பிரச்சாரத்தில் முக்கியமான ஒன்றாக அமைகின்றன.




- இந்தப் பிரச்சாரம், நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளில் 8-வது இலக்கான அனைத்து பணியாளர்களுக்கும் பாதுகாப்பான பணிச்சூழலை 2030ல் உருவாக்குதல் மற்றும் 7-வது இலக்கான அனைத்து முறையிலும் குழந்தைத் தொழிலாளர் முறையினை 2025 ஆம் ஆண்டிற்குள் ஒழித்தல் ஆகியவற்றை அடைவதற்கான செயல்களை துரிதப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு: “இளம் பணியாளர்களின் பணிமுறை பாதுகாப்பு, ஆரோக்கியம், பாதிக்கப்படக்கூடிய நிலை” (Occupational safety health (OSH) vulnerability of young workers).

- - - - - - - - - - - - - - -